மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

A.C.S. Hameed's Educational Services: An Evaluative Study

M.M.A. Abdullah[1], A.M.F. Sharmina[2], M.A.C.A. Fazlan[3] & M.N.F. Nasrin[4]

Department of Islamic Studies[1,2], Department of Arabic Language[3,4], South Eastern University of Sri Lanka

Manuscript ID : **MT7A0012**

Volume : **1**

Issue : **2**

Month : **December**

Year : **2021**

Received: 20.11.2021

Revised: 08.12.2021

Accepted: 17.12.2021

Published: 22.12.2021

Pages : 23-32

ABSTRACT:

A.C.S. Hameed is one of the most prominent personalities in the history of Sri Lankan Muslims. This study aims to identify his educational services. Based on the previous literature, this study analyses the secondary data related to the topic. The major finding of the study reveals that strong charisma on interests of the students during his tenure as a teacher, the implementation of scholarship schemes for students, the contribution to the establishment of zonal education offices, the supervision of educational activities, the establishment of various schools, the appointment of teachers in the Foreign Ministry, the issue of appointment letters to teachers, the establishment of Training College for teachers, the provision of various career opportunities related to education, writing of books and the promotion of the Islamic Teachers Union are his highlightable services regarding the education. Strong academic background and foreign ministry post were the main triggers for his services related to education. As a citizen of Sri Lanka, his educational services were not centered on a particular community, race, or religion but included people of different backgrounds. This study could be referred to for historical studies on the contributions of Sri Lankan Muslims and educational development in Sri Lanka.

KEYWORDS:

A.C.S. Hameed, Education, Services, Sri Lanka, Muslims, Minorities.

REFERENCES :

1. Farook, L. "ACS Hameed: A symbol of communal harmony". The Sunday Times, 2018, September 2. https://www.sundaytimes.lk/
2. Gafoor, A. The Legend Dr. A.C.S. Hameed. Udathalawinna: C.V. Publishers, 2010.
3. Nuhuman, A.C.A.M. "75th Birth Anniversary: A. C. S. Hameed - ardent internationalist". Daily News, 2002, April 10. http://archives.dailynews.lk/2002/04/10/fea04.html
4. Tilakaratna, M.W. "90th Birth Anniversary of late Dr. A.C.S. Hameed". Daily Mirror Online 2018, April 10. https://www.dailymirror.lk/article/-th-Birth-Anniversary-of-late-Dr-A-C-S-Hameed-148501.html

ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களின் கல்விச் சேவைகள்: ஓர் மதிப்பீட்டாய்வு

மு.ம.அ. அப்துல்லாஹ்[1], அ.மு.பா. ஷர்மினா[2], மு.அ.கா. பஸ்லான்[3], மு.ந.பா. நஸ்ரின்[4]

இஸ்லாமிய கற்கைகள் துறை[1,2], அரபு மொழித் துறை[3,4]

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கட்டுரைச் சுருக்கம்

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முக்கிய ஆளுமைகளுள் ஒருவரான ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களின் கல்விச் சேவைகளை இனங்காண்பதை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது. முன்னைய இலக்கியங்களின் மீளாய்வு முறையைத் தழுவிய இவ்வாய்வு தலைப்புடன் தொடர்பான இரண்டாம் நிலைத் தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறது. ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்பட்டமை, மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தியமை, கல்விப் பணிமனைகள் உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தமை, கல்விச் செயற்பாடுகள் பற்றிய மேற்பார்வைகளை மேற்கொண்டமை, பல்வேறு பாடசாலைகளை உருவாக்குவதற்கு வழிவகுத்தமை, வெளிநாட்டு ஸ்தானிகர் காரியாலயத்தில் கல்விமான்கள், ஆசிரியர்களுக்கு பதவிகள் வழங்கியமை, ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கியமை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றை உருவாக்கியமை, கல்வியுடன் தொடர்பான பல்வேறு தொழில் வாய்ப்புகளை வழங்கியமை, புத்தகங்கள் எழுதியமை மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தை ஊக்குவித்தமை போன்றவை அவரின் கல்விச் சேவைளுள் பிரதானமானவையாகும். பலமான கல்விப் பின்னணி மற்றும் வெளிவிவகார அமைச்சுப் பதவி போன்றவையே கல்வியுடன் தொடர்பான அவரது சேவைகளுக்கு பிரதான தூண்டுகோலாக அமைந்தன. அந்தவகையில் இலங்கைப் பிரஜை என்ற வகையில் அவரது கல்விச் சேவைகள் குறிப்பிட்ட சமூகத்தையோ இனத்தையோ மதத்தையோ மையப்படுத்தி அமையப்பெறாமல் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்களையும் உள்ளடக்கும் வகையில் அமையப்பெற்றிருந்து என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்புகள் மற்றும் இலங்கையில் கல்வி வளர்ச்சி தொடர்பான வரலாற்று ஆய்வுகளுக்கு இவ்வாய்வை வாசிப்பாகக் கொள்ள முடியும்.

கருச்சொற்கள்

ஏ.சி.எஸ். ஹமீத், கல்வி, சேவைகள், இலங்கை, முஸ்லிம்கள், சிறுபான்மை.

முன்னுரை

இலங்கை பல்வேறு மதங்களை உள்ளடக்கிய பல்லின சமூக கட்டமைப்பைக் கொண்ட ஒரு ஜனநாயக நாடாகும். இங்கு ஒவ்வொரு இனமும் வித்தியாசமான விகிதாசாரத்தோடு வாழ்ந்து வருகின்றனர். பெரும்பான்மையினமாக சிங்களவர்கள் வாழும் அதேவேளை, தமிழர்களும் முஸ்லிம்களும் இங்கு சிறுபான்மையாக வாழ்கின்றனர். இந்நாட்டில் மத, கலாசார, பண்பாட்டு வித்தியாசங்கள் பாரியளவில் இருந்தாலும் இலங்கையர்கள் என்ற தாயக உணர்வு அனைவரின் மனதிலும் இளையோடியுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் பூர்வீகம் மிகவும் தொண்மையானதாகும். அதேபோல் வரலாறு நெடுகிலும் முஸ்லிம்கள் இலங்கையுடன் மிகவும் நேசம் கொண்டவர்களாக இருந்த அதேவேளை அவர்கள் மூலம் இந்நாட்டுக்கு பல்வேறு சேவைகள் ஆற்றப்பட்டுள்ளன.

இலங்கை வரலாறு நெடுகிலும் முஸ்லிம்களால் இலங்கை சமூகத்துக்கு என்று பல்வேறு சேவைகள் ஆற்றப்பட்டு வந்துள்ளதை வரலாற்றை படிக்கும் போது காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறு சேவைகள் ஆற்றிய முஸ்லிம் அரசியல்வாதிகளுள் ஏ.சி.எஸ் ஹமீத் அவர்களும் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு அரசியல்வாதி ஆவார். ஒரு சிரேஷ்ட அரசியல்வாதி மட்டுமன்றி ஓர் அரசியல் ஞானியாகவும் சிறந்த ராஜதந்திரியாகவும் அரசியல் சாணக்கியமும் சாதுர்யமும் நிறைந்தவராகவும் ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் காணப்பட்டார்கள். தன்னுடைய இராஜதந்திர நுட்பத்தினைக் கொண்டு இலங்கைக்கு பெயரும் புகழும் ஈட்டித் தந்தவராவார்.

பொதுநல சேவையில் அவர் தன்னை ஈடுபடுத்தியதன் மூலம் 1960ம் ஆண்டு முதல் அரசியலில் உள்வாங்கப்பட்டு தொடர்ந்து நடந்த தேர்தல்களில் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்ற பெருமையையும் சிறப்பையும் கொண்டவராக ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் காணப்படுகிறார்கள். தன்னுடைய இளமைக் காலம் முதலே ஆசிரியராகவும் அதிபராகவும் கல்விப் பணியில் பல்வேறு சேவைகளை புரிந்த ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள், ஒரு அரசியல்வாதியானதன் பின்னர் புரிந்த சேவைகள் ஏராளமாக உள்ளன.

அரசியல், சமூகம், கல்வி, சமயம் சார்ந்த பல்வேறு சேவைகளை புரிந்து இன்றுவரை மக்கள் மனதில் பதிந்த ஒரு பிரபலமான அரசியல் புள்ளியாக ஏ.சி.எஸ். ஹமீத்

காணப்படுகிறார். இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து மக்களுக்கும் தன் அளப்பரிய சேவைகளை இவர் வழங்கியுள்ளார்.

ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் அரசியல் வாதிகளினால் இலங்கை சமூகத்துக்கென அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி போன்ற பல்வேறு துறைகளிலும் பல விதமான சேவைகள் இடம்பெற்றமையை வரலாறு நெடுகிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அவ்வாறான சேவைகளைப் புரிந்த முஸ்லிம் அரசியல்வாதிகளுள் ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களும் ஒருவராவார். பல்வேறு துறைகளிலும் இன, மத, பிரதேச, மொழி போன்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி அவரால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் அளப்பரியனவாகக் காணப்படுகின்றன. அவ்வாறான சேவைகளுள் இலங்கை மக்களுக்கான கல்விச் சேவைகளும் அடங்குகின்றன என்பதே எமது ஆய்வுப் பிரச்சனையாகும். அந்தவகையில் இவ்வாய்வு ஏ.சி.எஸ் ஹமீத் அவர்களின் கல்விக்கான சேவைகளை இனங்காண்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

ஆய்வு முறையியல்

முன்னைய இலக்கியங்களின் மீளாய்வு முறையைத் தழுவிய இவ்வாய்வுக்காக ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள ஆக்கங்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

சுய விபரம்

1929ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் இலங்கையின் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உள்ள அக்குரணைப் பிரதேசத்தின் குருகொடை எனும் ஊரில் பிறந்தார். 1960ஆம் ஆண்டு அரசியலில் காலடி எடுத்து வைத்த ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் சுமார் நாற்பது ஆண்டுகள் கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தினார். அவர் தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் 39 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும் அதில் 17 வருடங்கள் அமைச்சராகவும் சேவையாற்றியுள்ளார்.

ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் கட்டுகஸ்தோட்டை சென். அன்தனிஸ் கல்லூரியிலும், மாத்தளை விஜய கல்லூரியிலும், மாத்தறை சாஹிரா கல்லூரியிலும் கல்வி

பயின்றார். ஆங்கில எழுத்துக்களில் அவருக்கு இருந்த ஆர்வம் தனது 15 வயது முதலிலிருந்தே அவருடைய எழுத்துப்பணி வளரக் காரணமாக அமைந்திருந்து. அவர் 'சன்டே ஒப்சேவர்' எனும் பத்திரிகையில் சிறுவர் பகுதியுடன் தனது எழுத்துப் பணியை ஆரம்பித்தார்.

பாடசாலையில் தரம் 7இல் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது அவர் மாத்தளை பிரதேச பாடசாலைகளுக்காக 'New Broom' என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை ஆரம்பித்தார். அத்துடன் ஆங்கிலம் கற்பித்தல் மற்றும் முதியோர் கல்வி என்பவற்றிலிருந்த அவரின் ஆர்வமும் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வியில் இருந்த பின்னடைவு தொடர்பான அவதானமும் பிற்காலத்தில் அவர் மாத்தளை மற்றும் கண்டி மாவட்டத்தில் அதிக அளவிலான கல்வி நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கு பொறுப்பாக இருக்கச் செய்துள்ளது.

அவர் மாத்தளை வின்செஸ்டர் கல்லூரியின் பணிப்பாளராகவும் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அக்காலத்தில் இந்நிறுவனம் ஆங்கிலத்தில் நடத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பரீட்சைகளுக்காக மாணவர்களை தயார்படுத்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில் பல்வேறு வகையில் பலவிதமான சேவைகள் மேற்கொண்டு வந்த இலங்கை முஸ்லிம்களுள் ஏ.சி.எஸ் ஹமீத் அவர்களும் ஒரு முக்கியமான நபர் ஆவார். அவர் ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும் ராஜதந்திரியாகவும் நாட்டு மக்களுக்கு பல்வேறு சேவைகளை ஆற்றி வந்துள்ளார். குறிப்பாக கண்டி பிரதேசத்துக்கு அவர் பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார். அவற்றில் அவர் கல்விக்காக ஆற்றிய சேவைகள் அளப்பரியவையாகும்.

ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் ஆற்றிய கல்விப் பணிகள்

ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களின் பலமான கல்விப் பின்னணி கல்வியுடன் தொடர்பான பல்வேறு பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கான பின்புலமாக அமைந்தது. அந்தவகையில், ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பங்களிப்புக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

1. ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் மாணவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்பட்டமை

ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் ஆசிரியராக இருக்கும் காலத்தில் தனது மாணவர்கள் முறையாக கல்வியைப் பெறுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். பொதுப் பரீட்சை ஒன்றில் தன்னுடைய மாணவர் எவரேனும்

சித்திபெறத் தவறினால் அதற்கான காரணத்தை அறிவதற்காக தன்னுடைய சொந்த செலவிலேயே உரிய திணைக்களங்களுக்கு சென்று அதிகாரிகளை சந்தித்து நியாயமான காரணத்தை அறிய முற்பட்டமை இதற்கான சிறந்த சான்றாகும். அத்துடன் தான் ஆசிரியராக இருந்த காலப்பகுதியில் வறுமை நிலையில் இருந்த மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கான வழிவகைகளை செய்து கொடுப்பதில் ஆவலோடு செயலாற்றியமையானது அவர் கல்வியின் பெறுமதியை நன்கு உணர்ந்திருந்தமையையும் கல்விக்கு வறுமை தடையாக இருப்பதை ஒருபோதும் இருந்துவிடக்கூடாது எனும் அவரது மனோநிலையையையும் தெளிவாக பிரதிபலிக்கிறது.

2. மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தியமை

இலங்கை மக்களின் கல்வித் தரத்தினை அதிகரிக்கும் நோக்கில் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலையில் இருந்த இளைஞர் யுவதிகளில் தகுதியானவர்களை இனங்கண்டு புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், கியூபா, பங்களாதேஷ், ரஷ்யா, சீனா போன்ற பல நாடுகளுக்கு மருத்துவம் பொறியியல் போன்ற கற்கைகளைக் கற்பதற்காக அவர் அனுப்பி வைத்தமையானது பலநூறு வைத்தியக்கலாநிதிகளும் பொறியியலாளர்களும் கணக்காளர்களும் தோன்ற வழிவகுத்தது. உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் மட்டும் தங்கியிருக்காமல் வெளிநாடுகளுக்கும் சென்று படித்து வரவேண்டும் என்ற அவருடைய கொள்கை இதற்ககான பிரதான பின்னணிக் காரணமாக அமைந்தது.

அந்தவகையில், இக்காலப்பகுதியில் வெளிநாடுகளில் கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில்களைப் பெற்று உருவான வைத்தியர்கள் இன்றும் பிரபல்யம் பெற்று நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

3. கல்விப் பணிமனைகள் உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தமை

மத்திய இலங்கை முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்தியில் தனித்துவம் காக்கப்படவேண்டும் என்ற நோக்கில் முஸ்லிம் பாடசாலைகளின் நலன்களைப் பேணுவதற்காக கல்விப் பணிமனைகளில் முஸ்லிம் அதிகாரிகளை நியமிப்பதற்கு முன்னோடியாக இருந்த ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் முஸ்லிம் கல்விக்கான தனது உயரிய சேவையின் ஒரு அங்கமாக கண்டி கல்வித் திணைக்களத்தில் கலாபூஷணம் எஸ்.எம்.ஏ ஹஸன் அவர்களை முதன்முதலில் முஸ்லிம் பாடசாலைகளுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரியாக நியமனம் செய்தார். இந்நடவடிக்கை அன்று முதல் இன்று வரை முஸ்லிம் பாடசாலைகளுக்கு பொறுப்பாக முஸ்லிம் கல்வி அதிகாரிகளை நியமிக்கும் தனித்துவ நடைமுறை பின்பற்றப்படுவதற்கு அடித்தளமாக

அமைந்தது. மேலும் மத்திய மாகாண முஸ்லிம் கல்வித்துறைக்கான பிரத்தியேகமான ஒரு கல்வி அமைச்சு உருவாவதற்கும் ஏ.சி.எஸ் ஹமீத் அவர்களே மூலகாரணியாக விளங்கினார்கள்.

4. கல்விச் செயற்பாடுகள் பற்றிய மேற்பார்வைகளை மேற்கொண்டமை

மத்திய மாகாண முஸ்லிம் கல்விக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்து ஹாரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் சிங்கள மொழிப் பாடசாலைகளில் வளர்ச்சியையும், மத்திய மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளின் வளர்ச்சியையும் சமமாக நோக்கி வந்த ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் தவணைக்கு ஒருமுறை கல்விப் பணிப்பாளர்கள் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை ஒன்றுகூட்டி கல்வித் தரம் தொடர்பான கலந்துரையாடல்களையும் ஆய்வுகளையும் மேற்கொள்வதோடு அவ்விடயம் தொடர்பான குறை நிறைகளைக் கேட்டறிந்து அதற்குரிய நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க கூடியவராகக் காணப்பட்டமையும் கல்வி தொடர்பான அவரது சேவைகளின் முக்கிய அங்கமாகும்.

அத்துடன் திறமையான மாணவர்களைப் பாராட்டி கௌரவித்து அவர்களை ஊக்குவிப்பதோடு மட்டுமன்றி ஏனைய மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கான தன்னால் முடியுமான முயற்சிகளை மேற்கொண்டமையானது கல்வி தொடர்பான அவரது கரிசனைக்கான முக்கிய எடுத்துகாட்டாக விளங்குகிறது.

அதேபோல் பாடசாலைகளை விட்டு விலகியோருக்கு தொழில் பயிற்சி வழங்குவதற்காக தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவி அத்துறையையும் விருத்தி செய்தமையானது கல்வித்துறையில் ஈடுபாடு குறைந்த மாணவர்களுக்கான சிறந்த மாற்றீட்டுத் திட்டமாக அமைந்ததோடு சமூகத்தின் பல்துறைசார் திறன் விருத்தி தொடர்பான அவரது அவதானத்தையும் பிரதிபலிக்கிறது.

5. பல்வேறு பாடசாலைகளின் உருவாக்கத்துக்கு வழிவகுத்தமை

சமூக மேம்பட்டினைக் கருத்தில் கொண்ட ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் தனது தொகுதியில் மட்டுமன்றி பிற தொகுதிகளிலும், பிற மாவட்டங்களிலும் முஸ்லிம் பாடசாலைகளை உருவாக்குவதில் ஆர்வம் செலுத்தினார். அது மாத்திரமல்லாமல் தன்னுடைய தொகுதியில் அதிகமான தமிழ் மக்கள் வாழும் அலவத்துகொடை பிரதேசத்தில் தமிழ் சிறார்களின் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு தமிழ் பாடசாலை ஒன்றையும் நிறுவினார். இது அவரது இன மத பேதம் நோக்காத தன்மைக்கும் அவருடைய பரந்த மனப்பான்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். அதேபோல் அவர் தன்னுடைய தொகுதியில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் காத்திரமான பங்களிப்புக்களை வளங்கியுள்ளமையும் இதனை மேலும் வலுவூட்டுகிறது.

1960க்கு முன்னர் அஸ்ஹர் மத்திய கல்லூரியும் புளுகொஹதென்னை ஸாஹிரா மகா வித்தியாலயமும் சாதாரண பாடசாலைகளாகவே காணப்பட்டன. அவர் அஸ்ஹர் கல்லூரியை தேசியக் கல்லூரியாகவும், ஸாஹிரா மகா வித்தியாலயத்தை மத்திய மகா வித்தியாலயமாகவும் தரம் உயர்த்தி அக்குரணையில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் இரண்டு மாடிக் கட்டிடம், மூன்று மாடிக் கட்டிடங்களை பெற்றுக்கொடுத்தோடு அப்பாடசாலைகளில் காணப்பட்ட கட்டிட மற்றும் தளபாட பிரச்சினைகளையும் அவ்வப்போது தீர்த்து வைத்தார்.

நீரெல்ல முஸ்லிம் வித்தியாலயம், பானகமுவ முஸ்லிம் வித்தியாலயம், குருந்துகஹ எல முஸ்லிம் வித்தியாலயம், கசாவத்த முஸ்லிம் வித்தியாலயம், தாருல் உலூம் வித்தியாலயம், மல்கமன்தெனிய முஸ்லிம் வித்தியாலயம் போன்ற பல பாடசாலைகள் இவரது காலத்தில் திறக்கப்பட்டமையானது தான் சார்ந்துள்ள சமூகத்தின் கல்வி மேம்பாடு தொடர்பான அவரது அக்கறையைத் தெளிவுபடுத்துகிறது.

அதேபோல் 1977இல் ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்பே அக்குரணையில் காணப்பட்ட பாடசாலைகளின் அதிகமான குறைபாடுகள் தீர்க்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

C.W.W. கன்னங்கரா அவர்களின் இலவசக் கல்வி பற்றிய கொள்கையில் அதிகம் ஈர்க்கப்பட்ட ஏ.சி.எஸ் ஹமீத் அவர்கள் கல்வியில் சமவாய்ப்பு என்ற கோட்பாட்டைப் பின்பற்றி தான் சார்திருந்த முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் முனைப்போடு செயல்பட்டார். சில பொழுதுகளில் சம வாய்ப்பு தொடர்பான விடயங்களில் பாரபட்சம் காட்டப்படும் நிலை ஏற்படும்போது தனது சமூகத்தின் உரிமைகளைப் பெறுவதற்காக அவர் மேற்கொண்ட முனைப்புகள் இதனை நன்கு உணர்த்துகின்றன. குறிப்பாக பாடசாலைகளுக்கு இடையிலான வளப்பகிர்வு முறையில் சமத்துவம் காணப்படாதவிடத்து அதுகுறித்த அவருடைய செயற்பாடுகள் அவருடைய அரசியல் முதிர்ச்சியைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

6. வெளிநாட்டு ஸ்தானிகர் காரியாலயத்தில் கல்விமான்கள் ஆசிரியர்களுக்கு பதவிகள் வழங்கியமை

1947ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு அமைச்சுப் பதவியை இந்த நாட்டின் பிரதமரே வகித்து வந்தார். 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் கலாநிதி ஏ.சி.எஸ் ஹமீத் அவர்களுக்கு வெளிநாட்டு அமைச்சர் பதவி கிடைக்கப்பெற்றதன் மூலமாக வெளிநாடுகளுக்கான ஸ்தானிகர் காரியாலயங்களிலும் வெளியுறவு அமைப்புக்களிலும் கல்விமான்களும் ஆசிரியர்களும் உத்தியோகம் பெறும் வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தமை இவருடைய கல்விச் சேவையின் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது.

7. ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கியமை

1956ஆம் ஆண்டு இலங்கையின் முதல் கல்வி அமைச்சராக பதவியேற்ற கலாநிதி டபில்யூ தஹநாயக்க அவர்கள் முஸ்லிம் ஆசிரிய ஆசிரியைகளுக்கான நியமனங்களை ஆரம்பித்து வைத்தார். முஸ்லிம் பெண் ஆசிரியர்களுக்கு காணப்பட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 5 பாடங்களில் சித்தியடைந்த முஸ்லிம் பெண்களுக்கான ஆசிரிய நியமனம் வழங்கும் திட்டம் தஹனாயக்க அவர்களால் அமுல்படுத்தப்பட்டது. அதன்போது பரவலாக இடம்பெற்ற ஆசிரியர் நியமனங்களில், கொழும்பிலிருந்த கல்வி அமைச்சு காரியாலயத்தில் எழுதப்படும் நியமனக் கடிதங்களை கண்டிக்கு புகையிரதத்தின் மூலம் கொண்டுவந்து அவற்றை உரிய ஆசிரியைகளிடம் வழங்கி அவர்களை உரிய பாடசாலைகளில் கடமை ஏற்கச் செய்வதிலும் ஏ.சி.எஸ். ஹமீதின் பங்களிப்பு காத்திரமனதாகும்.

8. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உருவாக்கியமை

கலாநிதி ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களின் கல்விச் சேவைகள் தன்னுடைய தொகுதியையும் தன்னுடைய ஊர் மக்களையும் மாத்திரம் மையப்படுத்தி அமையாமல் முழு நாட்டு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தில் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் எல்லைப்புறத்தில் தேசிய கல்விக் கல்லூரி ஒன்றை நிறுவுவதில் அவர் வழங்கிய ஒத்துழைப்பு இன்று ஆயிரக்கணக்கான தொழில்சார் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உருவாகுவதற்கு காரணமாக அமைகின்றமை இதற்கான சிறந்த எடுத்துகாட்டாகும்.

அதேபோல் கண்டியில் முஸ்லிம் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கலாசாலை உருவாக்கப்பட்டமையிலும் ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களின் பங்கு அளப்பரியது. மத்திய இலங்கையில் ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் அன்றைய காலம் தமது பயிற்சிகளைப் பெறுவதற்காக வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பல்வேறு இடங்களுக்கும் திரிந்து கொண்டிருந்த நிலையை மாற்றியமைத்து தம்முடைய சொந்த பிரதேசத்திலேயே ஆசிரியர் பயிற்சியை பெறுவதற்கு ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் வழியமைத்துக்கொடுத்தார்கள். அன்றைய கல்வி அமைச்சராக செயற்பட்ட டபிள்யூ தஹநாயக்கவிடம் குழுவாக சென்று விடுக்கப்பட்ட 39 கோரிக்கைகளில் உடனடியாக செயல்படுத்தப்பட்ட 19 கோரிக்கைகளில் முதல் அம்சமாக கண்டி முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உருவாக்கமே இடம்பெற்றிருந்தது. இக்கோரிக்கைகளுள் 50%ஆன முஸ்லிம் மாணவர்கள் பயிலக்கூடிய பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக

ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் கல்வி அமைச்சில் முஸ்லிம் பாடசாலைகளின் நலன்காக்கும் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் அடங்கியிருந்தன.

9. பல்வேறு தொழில் வாய்ப்புகளையும் வழங்கியமை

அக்குரணைப் பிரதேசத்தில் இருந்த நூற்றுக்கணக்கான படித்த வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் ஆசிரியர் தொழிலை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் மேற்கொண்டார்கள். 1980 மற்றும் 1985க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அக்குழுவில் இருந்த க.பொ.த. சாதாரணதரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் படித்த இளைஞர் யுவதிகளுக்கும் ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தார்கள். இதன்போதே சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். அன்று காணப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை நீங்குவதற்கு இது வழிகோலியது.

10. புத்தகங்கள் எழுதியமை

ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் எழுதிய நூல்களையும் அவருடைய கல்விப் பணிக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் வெளிநாட்டு அமைச்சராக இருந்தபோது ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள், அணிசேரா மகாநாடுகளின் அமர்வுகள் போன்ற உலகளாவிய மாநாடுகளில் இடம்பெற்ற அவரது உரைகளில் 97 உரைகளை உள்ளடக்கி 1988ஆம் ஆண்டு இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட “Foreign Policy Perspectives of Sri Lanka: selected speeches, 1977-1987” எனும் நூலும் ஆயுத கலாசாரத்தால் ஒரு நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாதென்றும் நல்லிணக்கப் பேச்சுவார்த்தைகள் அவற்றை உறுதிப்படுத்தும் என்றும் இலங்கை அரசியல் போக்குகளையும் இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளையும் வைத்து எழுதப்பட்ட “In Pursuit of Peace on Non Alignment and Regional Cooperation” எனும் நூலும் அல்குர்ஆன் வசனங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட கவிதை நூலான “The Spring of Love and Mercy” எனும் நூலும் சிறுவர்களுக்கான படிப்பினையூட்டும் நீதிக் கதைகளைக் கொண்ட ஆங்கிலத்தில் இவர் எழுதிய “The Owl and the Lotus” ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

11. இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தை ஊக்குவித்தமை

வலுவிழந்து காணப்பட்ட அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தை ஊக்குவிப்பதிலும் இவர் முன்னின்று உழைத்ததுடன் பல்கலைக்கழக மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்காக புலமைப்பரிசில் நிதியம்

ஒன்றையும் ஆரம்பித்து வைத்தமை இவரது சேவைகளுள் மிக முக்கியமானவையாகும்.

முடிவுரை

இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களின் வரலாற்றில் ஏ.சி.எஸ். ஹமீத் எனும் ஆளுமை தவிர்க்க முடியாத ஒன்றாகும். இன, மத பாகுபாடுகள் இன்றி பல்துறைசார் சேவைகளை மேற்கொண்டுள்ள இவரின் கல்வித் துறைக்கான சேவைகள் முக்கிய மைல்கற்களாகும். பலமான கல்விப் பின்னணி மற்றும் தான் வகித்த அரசியல் பதவிகள் இவரது சேவைக்கான முக்கிய ஊக்கிளாக அமைந்துள்ளன. ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்பட்டமை, மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தியமை, கல்விப் பணிமனைகள் உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தமை, கல்விச் செயற்பாடுகள் தொடர்பான மேற்பார்வைகளை மேற்கொண்டமை, பல்வேறு பாடசாலைகளின் உருவாக்கத்துக்கு வழிவகுத்தமை, வெளிநாட்டு ஸ்தானிகர் காரியாலயத்தில் கல்விமான்கள் ஆசிரியர்களுக்கு பதவிகள் வழங்கியமை, ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கியமை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உருவாக்கியமை, கல்வியுடன் தொடர்பான பல்வேறு தொழில் வாய்ப்புகளை வழங்கியமை, புத்தகங்கள் எழுதியமை மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தை ஊக்குவித்தமை போன்றவையே அவரின் கல்விச் சேவைளுள் பிரதானமானவையாகும். கல்வி தொடர்பான இவரது சேவைகளாக அடையாளப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதனூடாக இவரது சேவைகளின் பெறுமானம் தொடர்பான துல்லியமாக மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியும்.

துணைநூற்பட்டியல்

1. பாறூக், எல். “ஏ.ஸி.ஸ். ஹமீத்: மத நல்லிணக்கத்தின் ஒரு சின்னம்” . த சண்டே டைம்ஸ், 2018, செப்டம்பர் 2. https://www.sundaytimes.lk/
2. கபூர், ஏ. ஏ.சி.எஸ். ஹமீத். உடைதலவின்ன: சி.வி. பதிப்பகம், 2010.
3. நூமான், ஏ.சி.ஏ.எம். “75ஆவது பிறந்ததினம்: ஏ.ஸி.ஸ். ஹமீத்- ஒரு தீவிர சர்வதேசவாதி” . டெய்லி நியூஸ், 2002, ஏப்ரல் 10. http://archives.dailynews.lk/2002/04/10/fea04.html
4. திலகரத்ன, எம்.டபில்யூ. மறைந்த ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களின் 90ஆவது பிறந்த தினம். டெய்லி மிரர் ஆன்லைன், 2018, ஏப்ரல் 10. https://www.dailymirror.lk/article/-th-Birth-Anniversary-of-late-Dr-A-C-S-Hameed-148501.html